1979 மார்ச் 19]

திரு. மு. அம்பிகாபதி ; தலைவர் அவர்களே, தமிழகத்தில் 137 முந்திரித் தொழிற்சாலைகளும், 76,000-க்கு மேற்பட்ட தொழிலாளர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு மினிமம் வேஜஸ் (குறைந்த பட்ச ஊதியம்) என்ன என்பதை அரசாங்கம் அறிவிக்கவில்லை என்று தெரிகிறது. அந்தத் தொழிலாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்யும் போது அந்தத் தொழிலில் இருக்கின்ற முறைகளைப் பரிசீலித்து, அதிலே பால் பட்டு காயம் அடைவது மற்றும் உள்ள சிக்கல்களைப் பரிசீலித்து, அதிலே இருக்கிற பல்வேறு அம்சங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, கூலி நிர்ணயிப்பது தான் வழக்கம். அமைச்சர் அவர்கள் அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னார்கள். ஆகவே, முந்திரித் தொழிலாளர்களுக்கு உள்ள குறைகளைப் பரிசீலித்து, குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்க அதைக் குறித்து பரிசீலிக்க, ஒரு கமிட்டி அமைத்து, அவர்களை இது குறித்து சிந்தனை செய்ய அரசு ஆணையிடுமா?

மாண்புமிகு திரு. எஸ், இராகவானந்தம் ; தலைவர் அவர்களே, மத்திய அரசு ஒரு குழுவை ஏற்கனவே அமைத்து இருக்கிறது. அது தன்னுடைய வேலையைச் செய்துகொண்டு இருக்கிறது. குழுவின் அறிக்கை வந்தபிறகு நடவடிக்கை எடுக்கப்படும் என்று முன்னதாகவே கூறிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அந்த நேரத்தில் இங்கே இல்லை என்று கருதுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. மு. அம்பிகாபதி, தாங்கள் துணை வினா கேட்க 3 நிமிடம் எடுத்துக்கொண்டு விட்டீர்கள்.

நல்லான்குப்பம் குடிசைக் பகுதியில் மராமத்துப் பணிகள்

* வினா எண். 467— திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சென்னை அசோக்நகர் பகுதியிலுள்ள நல்லான் குப்பம் குடிசை மாற்று வாரியப் பகுதியிலுள்ள கழிவு நீர்க் குழாயில் அடைப்பு ஏற்பட்டு அப்பகுதியில் சுகாதாரம் கெடுவதால் அதை உடனே சீர் செய்வது குறித்து குடியாத்தம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினரது 17-7-1978 தேதியிட்ட மனு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; (அ) ஆம்.

(ஆ) சென்னை அசோக்நகர், நால்லான்குப்பம் குடிசைப் பகுதியில் கழிவு நீரை குழாய்கள் மூலம் அப்புறப்படுத்த ரூ. 2.94 லட்சம் அளவில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப் பட்டுள்ளது. இதில், கழிவு நீரை மாநகராட்சி கழிவு நீர்க் குழாயுடன் இணைத்தல், குளியலறை மற்றும் கழிப்பிடங் களுக்கு மராமத்து செய்தல், சாலைகள் பழுது பார்த்தல் ஆகியன அடங்கும். குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மேற்படி செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன் ; சார், இந்தக் கழிவு நீர் குழாயில் அடைப்பு ஏற்பட்டது மட்டுமல்ல, குடிநீர்க் குழாயிலும் அந்தக் கழிவு நீர் புகுந்த காரணத்தால், அந்தப் பகுதி மக்கள் அதைக் குடித்ததன் விளைவாக மஞ்சள் காமாலை போன்ற வியாதிகளுக்கு உட்படுத்தப்பட்டனர் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஒரு புகார் வரவில்லை. இது கூட மாம்பலம் பகுதி மார்க்சிஸ்ட் கட்சி செயலாளர் எழுதிய கடிதத்தின் மீது மாண்புமிகு உறுப்பினர் என்குளோஸ்ட் லெட்டர் வைத்து, இதைப்பற்றிக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டதன் பேரில், அது குடிசை மாற்று வாரியத் திற்கு அனுப்பப்பெற்று, அந்த வாரியம் அந்தக் கடிதத்தின் மூலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைதான் இந்த பதிலாகும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போல் எந்தத் தகவலும் அரசுக்கு வரவில்லை. அவர்கள் சொல்வது போல் அங்கே விரும்பத்தகாத காரியங்கள் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சு. பாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற் போது சென்னையில் கழிவு நீர் அடைப்பு ஏற்பட்டால், அதைத் தவிர்க்க பாதாளச் சாக்கடையில் தொழிலாளர்கள் இறங்குகிற போது, பலர் உயிர் துறக்கிறார்கள். அதைப் போக்குவதற்காக நம்முடைய மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஒரு சில வாரத்திற்கு முன்னால் அவர்களுக்குப் புதிய சாதனத்தை அளிக்கப்போவதாகவும் குறிப்பிட்டுள்ளார். அந்த சாதனம் என்ன என்று அவர் விளக்கவில்லை. அது மேல் நாட்டுச் சாதனமா, நம்நாட்டுச் சாதனமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி சென்னை அசோக் நகர் பகுதி யிலுள்ள நல்லான்குப்பம் குடிசை மாற்று வாரியப் பகுதியில் கழிவு நீர் குழாயில் அடைப்பு ஏற்பட்டது பற்றியதாகும்.

1979 மார்ச் 19]

திரு. தீ. சு. நல்லதம்பி ; தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கின்ற தற்போதுள்ள 120 வட்டங்களில் ஏறக்குறைய பெரும்பாலும் வடசென்னை, மேற்குச் சென்னை பகுதியில் அவைகள் பற்றி அமைச்சருக்குத் தெரியும்--குடிநீரிலே கழிவு நீர் கலந்து அதனால் பல தொல்லைகளுக்கு மக்கள் ஆளாக்கப் பட்டதும் தெரியும். அது குறித்து சென்னையில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் அதிகாரிகளை அணுகி சொன்னபின்னாலும் அது உடனடியாகக் கவனிக்கப்படுவதில்லை. அப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்க இன்றைய அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்று இருக்கின்ற குடிநீர் வடிகால் வாரியம் செய்யவேண்டுமா அல்லது மாநகராட்சி செய்யவேண்டுமா என்பதை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவிக்கவேண்டும். அதைப்போன்று குறைபாடுகள் ஏறக்குறைய 100 வட்டங்களில் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு செய்து என்னோடு வருவாரானால், இந்த 6 மாத காலத்தில் எந்தெந்தப் பகுதியில் அப்படிப்பட்ட உடைப்பு இருக்கின்றன என்பதை நிரூபிக்க இயலும். அந்த நிலைமைகளைத் தடுக்க அரசு உத்தரவாதம் தருமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 9·40]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நீண்டகால நண்பர் என்ற காரணத்தால் நான் பதில் சொல்கிறேன். இது குடிநீர் வடிகால் வாரியத்தைச் சேர்ந்தது அல்ல. Madras Metropolitan Water Supply and Sewerage Board. குடிநீர் வழங்குதல்-கழிவுநீர் அகற்றுதல் வாரியத்தினுடைய பணி· இந்த மாதிரியான புகார் வந்துள்ளது. உடனடியாக 'ஆன் தி ஸ்பாட் இன்ஸ்பெக்ஷன்' என்ற முறையில் அதிகாரிகளுடன் சென்று, காரணத்தைத் தெரிந்து நடவடிக்கை எடுத்திருக்கிறேன் அதற்கான பாராட்டுக் கடிதங்கள் பல எனக்கு வந்திருக்கின்றன; பத்திரமாக வைத்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதிக்கு ஒருநாள் நான் வருகிறேன். இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர் கூட்டம் முடிவடைந்த பின்னால் ஒருநாள் இருவரும் போவோம். அன்றைக்கு 4 மணி நேரம் ஒதுக்கி வைத்துக் கொள்ளுங்கள். you must spare atleast four hours.

திரு. சு. பாலன் : தலைவரவர்களே, பாதாள சாக்கடையில் மூழ்கி, அடைப்பை அகற்றுகின்ற தொழிலாளர்களுக்கு புதிய சாதனம் கொடுத்து, அவர்களுடைய உயிரைக் காப்பாற்றப் போவதாக அமைச்சர் அறிவித்தது பத்திரிகைகளில் வந்தது. அந்த புதிய சாதனம் எப்போது கொடுக்கப்படும்?

[1979 மார்ச் 19

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே. மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. இருந்தாலும் தலைவர் அனுமதிக்கிற காரணத்தால் 'மேன் ஹோல்' என்று சொல்லக்கூடிய அந்தப் பள்ளத்திற்கு உள்ளே இறங்கி, உடலெல்லாம் மலமாக வெளியே வந்த தொழிலாளியைப் பார்த்த புரட்சித் தலைவர் மிகுந்த வேதனையுற்று, இந்த நிலையை உடனடியாகப் போக்க வேண்டுமென்று என்னிடம் தொலைபேசியில் தெரிவித்தார்கள். அதற்காக 50 இலட்சம் ரூபாய் செலவில் இயந்திரங்கள் (குறுக்கீடு) இது முக்கியமான விளக்கம். கொஞ்சம் பொறுமையாக இருங்கள். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் 3 வகையான இயந்திரங்கள் மேல் நாடுகளிலிருந்து வாங்கப்படுவதாக இருக்கிறது; ஒன்று இந்தியாவில் தயாராவது. ஃபாரின் மேய்டு 3, இன்டிஜினிஸ் 1. அந்த இயந்திரங்கள் வந்துவிட்டால் தொழிலாளி மூழ்கி அடைப்பை எடுக்க வேண்டிய அவசியம் இல்லாமல் மேலே இருந்தே செய்ய முடியும். இன்னும் இரண்டாண்டுக்குள்ளாக அந்த நிலையை ஏற்படுத்திவிட முடியும், We are at it 'வி ஹேவ் கம்மன்ஸ்ட் நௌ. phased புரோகிராமாக இரண்டாண்டுக்குள் முடித்துவிடலாம் என்று இந்த அரசு முடிவு செய்திருக்கிறது,

திரு. சென்னை மு. அரங்கநாதன் : தலைவரவர்களே, குடிநீர்–வடிகால் பிரிவு நம்முடைய அமைச்சரவர்கள் சொன்னதைப்போல 'குடிநீர் வழங்குதல் கழிவுநீர் அகற்றுதல்' வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டதால் சென்னை மாநகரம் முழுவதும் எங்குபார்த்தாலும் கழிவு நீர் சாலைகளில் பாண்டிச்சேரியில் ஓடுவதைப் போல இங்கும் ஓடுவதை அமைச்சரவர்கள் அறிவார்களா? இந்தக் குறையைப் போக்க முன்போலவே சென்னை மாநகராட்சியின் பொறுப்பிலேயே குடிநீர்–வடிகால் பராமரிக்கும் பணியை மேற்கொள்ள உரிய நடவடிக்கை எடுக்க அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா? இன்னொன்று, நான் சென்னை மாநகராட்சியின் சுகாதாரக் குழுத் தலைவராக இருந்தபோது கழிவுநீர் ஆழ்கிணற்றில் அடைப்பு ஏற்பட்டால் அதை அகற்ற உள்ளே மூழ்கி தொழிலாளி உள்ளே இறங்கும்போது மலம் அவன்மீது படாமல் இருக்க 'பிளாஸ்டிக்' கவசம் வழங்கவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது; அது குறிப்பிலும் இருக்கிறது. கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் உள்ளாட்சித் துறை அமைச்சர் பதில் சொல்லும்போது உடனடியாக அது செயல்படுத்தப்படும் என்று சொன்னார், இன்னும் செயல்படுத்தப்படவில்லை. இந்த அமைச்சராவது உடனடியாக அதைச் செயல்படுத்துவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

1979 மார்ச் 19]

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இப்படிப்பட்ட சாக்கடைகளில் தொழிலாளர்கள் இறங்கி சுத்தம் செய்கிறபோது ஏற்படுகின்ற இடர்ப்பாடுகளைத் தவிர்க்க 50 இலட்சம் ரூபாய் செலவிற் கருவிகள்—வெளிநாட்டிலிருந்தும் இந்தியாவில் இருந்தும் வாங்கும் ஏற்பாட்டைப் பற்றிச் சொன்னார்கள். 5 இலட்சம்அல்லது 10 இலட்சம் ரூபாய் செலவிலேயே அவர்கள் உயிர் பாதுகாப்புக்கான காரியத்தை உடனடியாக செய்யக்கூடிய சாத்தியக்கூறு இருக்கிறது என்று அறிகிறேன். கடலிலே மூழ்கும் போது மூச்சுத் திணறலைத் தடுக்க முகமூடி அணிகிறார்கள். அதைப்போல நச்சுக்காற்றில் வேலை செய்கிறவர்கள் பாதுகாப்பு முகமூடி அணிகிறார்கள், அதைப்போன்ற கருவிகளை இந்தச் சாக்கடைத் தொழிலாளர்களுக்கும் வாங்கிக் கொடுத்தால் நல்லபலன் இருக்காதா? அப்படிப்பட்ட கருவிகளை வாங்கிக் கொடுக்க அரசாங்கம் ஏதாவது உடனடி ஏற்பாட்டைச் செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; தலைவரவர்களே, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் கேட்கின்ற காரணத்தால் தனிக் கேள்வி போடுங்கள் என்று சொல்லாமல் பேராசிரியரிடம் எப்போதும் வைத்திருக்கிற மதிப்பை வைத்துச் சொல்கிறேன். உள்ளே இறங்காமல் வெளியிலேயே இருந்து அடைப்பை அகற்றுகின்ற திட்டத்தைப்பற்றி நான் சொன்னேன். இந்தத் திட்டம் நிறைவேற்றப் படும்போது தொழிலாளி உள்ளேயே இறங்க வேண்டிய தேவையில்லை. நீங்கள் சொன்னதைவிட ஒருபடி மேலேயே செய்கிறோம். We are a step in advance of the suggestion that you have already made.

திரு. டி. கே. கபாலி : தலைவரவர்களே, 5 இலட்சம் மக்கள் இருந்தபோது இந்தக் கழிவு நீர் அகற்றுவதற்கான அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இப்போது சென்னை நகரில் 30 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். ஆகவே அதற்குத் தகுந்தவாறு குழாய்களைப் பெருக்கி இதனை விரிவு படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, கேள்விகள் எல்லாம் மூலக்கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் இருக்கின்றன.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவரவர்களே, பற்பல இடங்களில் இப்படிப்பட்ட சாக்கடைகளில் அடைப்பு இருந்ததைக் குறித்து நானே நேரடியாக சம்பந்தப்பட்ட ஆதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது அவர்கள் இந்தக் கழிவு நீர் சாக்கடைகளைச் சுத்தப்படுத்துவதற்குரிய வண்டி இரண்டே இரண்டுதான் இருக்கின்றன என்ற தகவலைத் தந்தார்கள். இரண்டு வண்டிகள்தான் இந்தச் சென்னை நகரில் உள்ள எல்லா பகுதிகளுக்கும், அதாவது வட சென்னை, தென் சென்னை, போன்ற எல்லா பகுதிகளுக்கும் சென்று பணியினை மேற்கொள்கின்றன. ஆகவே அந்த வண்டியை அதிகரிக்க ஆவன செய்யப்படுமா? மாண்புமிகு உறுப்பினர் திரு. நல்லதம்பி அவர்கள் கேள்வி கேட்டபோது மாண்புமிகு அமைச்சரவர்கள் அவர்களுடைய தொகுதிக்கு வருவதாகச் சொன்னார்கள். என்னுடைய தொகுதி அதைவிட மிக மோசமாக இருக்கிறது. ஆகவே என்னுடைய தொகுதிக்கும் அவர்கள் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே முதலில் கேட்ட கேள்விக்குஓ தனிக் கேள்வி போடவேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். இரண்டாவது கேட்ட கேள்விக்கு வருகிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் நான் பல தொகுதிகளுக்குச் செல்ல இருக்கிறேன். ஏற்கெனவே பல தொகுதிகளுக்குச் சென்றும் இருக்கிறேன். அந்தந்த அமைப்புக்கள் கூப்பிட்டவுடன் செல்கின்ற காரணத்தால் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு நேரம் இல்லாமல் போய் விடுகிறது, ஆகவே இன்னும் பல இடங்களுக்கும் செல்ல இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் நானும் கலந்து அவருடைய தொகுதிக்கு வருவதற்கு, வந்து பார்வையிடுவதற்கு ஏற்பாடுகளை ஒரு நாள் செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வினா. எண். 468, 469—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்பெற்றன.

கூவம் சீரமைப்புப் பணிகள்

* வினா எண். 470 திரு. கா. வே. கந்தசாமி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கூவம் சீரமைப்பு வேலைகள் ஆரம்பித்து எத்தனை ஆண்டுகள் ஆகியுள்ளது?

(ஆ) இதன் மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு?